விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை மற்றும் விரிவான விடை எழுதும் வகையில் ஒருங்கே அமையப் பெற்ற மேற்படி துறைத்தேர்வுகளில் இரண்டு வகைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்களைக் கட்டாயமாகப் பெற்றால்தான் குறிப்பிடப்பட்ட துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படுவர்.

8. No candidate will be allowed to leave the examination hall till the closure of the examination.

   எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வுக்குரிய நேரம் முடிவதற்கு முன்பாகத் தேர்வுக் கூடத்தை விட்டுச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

9. Strict silence should be maintained in the examination hall.

   தேர்வுக்கூடத்திற்குள் கண்டிப்பாக அமைதி கடைபிடிக்கப்பட வேண்டும்.

10. Candidates are required to provide themselves with their own pens, ink, and blotting paper and instrument boxes.

    விண்ணப்பதாரர்களே எழுதுகோல், மை, மையொற்றித்தாள் மற்றும் கருவிப்பெட்டிகள் ஆகியவற்றை எடுத்து வரவேண்டும்.

11. The candidates are permitted to use calculators at the examination hall only for writing the descriptive type of Examination.

    விண்ணப்பதாரர்கள் விரிவான விடை எழுதும் வகையிலான தேர்வுகளுக்கு மட்டும் கணிப்புப் பொறியை (Calculator) உபயோகிக்க அனுமதிக்கப்படுவர்.

12. **SPECIAL INSTRUCTIONS FOR OBJECTIVE PATTERN OF EXAMINATION (OMR)**

    **கொள்குறிவகை தேர்வு முறைக்கான சிறப்பு விதிமுறைகள்**

    a. The use of books will not be allowed for all the objective type / pattern of examination.

       அனைத்து கொள்குறிவகை தேர்வுகளுக்கும் புத்தகங்கள் கொண்டு தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டாது.

    b. The Candidates will be supplied with personalized OMR Answer Sheet containing self-description of the Candidate like Photo, Name, Register No., Test Code No./ Name of the Departmental Test, Date of the Examination, Venue of the Examination etc. The candidates are required to shade their answer in the appropriate boxes therein.

       கொள்குறி வகை தேர்வுக்கான விடைத்தாளில் விண்ணப்பதாரருடைய புகைப்படம், பெயர், பதிவு எண், தேர்வுக்குறியீட்டு எண்/ துறைத்தேர்வின் பெயர், தேர்வு நாள் மற்றும் தேர்வுக் கூடம் பற்றிய விவரங்கள் அடங்கிய தனித்துவமான OMR விடைத்தாள் வழங்கப்படும். வினாக்களுக்குரிய விடையாக விண்ணப்பதாரர் கருதும் விடைகளை பொருத்தமான கட்டங்களில் விண்ணப்பதாரர் நிரப்ப வேண்டும்.

c. It is the responsibility of the candidate to confirm as to the personal particulars printed in the OMR answer sheet are related to him before shading answer therein.

விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட தனித்துவமான OMR விடைத்தாளில் தம்மைப்பற்றிய தன் விவரங்கள் சரியாக உள்ளனவா என்பதை பதிலளிக்க துவங்குமுன் உறுதி செய்து கொள்ள வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

d. Before starting to write the objective type of examination, candidates should check the OMR bar code in the answer sheet given to them. If the personalised OMR answer sheet is defective in any way ask the Room Invigilator to replace it.

விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதத் தொடங்குமுன் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள OMR விடைத்தாளில் பட்டைக் குறிமுறை (bar code) இடப்பட்டுள்ளதா என சரிபார்த்துக் கொள்ளவும். மேலும், OMR விடைத்தாள் எவ்வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால் அதனை மாற்றிக் கொடுக்கும்படி அறைக் கண்காணிப்பாளரிடம் கேட்கலாம்.

e. Candidates are instructed to read the instructions to candidates on the side 1 of the OMR Answer sheet.

OMR விடைத்தாள் பக்கம் 1-ல் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

f. Candidates are instructed to carefully count the number of questions unanswered and mention it in the OMR Answer Sheet (for the objective type of Examination) without fail. If there is any variation/difference between the answer fields actually left blank and the number shaded by the candidates, 2 marks will be deducted from the total marks secured by the candidate.

கொள்குறிவகைத் துறைத்தேர்வுகளில் விடையளிக்காத வினாக்களின் எண்ணிக்கையை விண்ணப்பதாரர் கவனமாகக் கணக்கிட்டு OMR விடைத்தாளில் குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விடையளிக்கப்படாத விடைக்குறியீட்டுக் கட்டங்களின் எண்ணிக்கைக்கும் உண்மையிலேயே விண்ணப்பதாரரால் விடையளிக்காமல் விடப்பட்ட விடைக்குறியீட்டுக் கட்டங்களின் எண்ணிக்கைக்கும் ஏதேனும் வேறுபாடுகள் / வித்தியாசம் காணப்படின் விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்களிலிருந்து இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

g. Candidates are allowed to write the objective type of examination in ball point pen only (blue or black or blue black only).

கொள்குறிவகை தேர்விற்கு விண்ணப்பதாரர்கள் நீலம் அல்லது கருப்பு அல்லது கருநீலம் ஆகிய பந்துமுனைப் பேனாக்களை மட்டுமே எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

h. Answer sheet will be invalidated if any of the answer is shaded in pencil.

விடைத்தாளில் ஏதாவது விடைகள் பென்சில் கொண்டு நிரப்பப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.

24. TNPSC Bulletins containing detailed results of Departmental Examinations are sent to the District Collectorates, Taluk Offices and District Central Libraries for providing information to the candidates.

விண்ணப்பதாரரின் தகவலுக்காக துறைத்தேர்வின் முடிவுகள் அடங்கிய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டிதழ் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

25. The results of the Examinations (i.e.,) the Register Numbers of the successful candidates will be exhibited in the Collectorate, Taluk offices and published in the TNPSC Bulletins for the information of the candidates.

விண்ணப்பதாரர்களின் தகவலுக்காக தேர்வின் முடிவுகள், அதாவது வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்களின் பதிவு எண்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் வட்டாட்சியர் அலுவலகத்திலும் பார்வைக்கு வைக்கப்படும். மேற்படி முடிவுகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டிதழில் வெளியிடப்படும்.

Date : 07.03.2019

**Controller of Examinations**

Website : www.tnpsc.gov.in
E-mail : coetnpsc.tn@nic.in
(Office) : 044 –25300 300
Fax No. : 044 – 25300 598
**Toll Free No: 1800 425 1002**